சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண். 120/2021

08.04.2025

வா.சா.2 திரு. ராஜேந்திரன், த/பெ. குமாரசாமி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்தின் புல எண், விஸ்தீரணம், நான்கெல்லை விவரம் தெரியாது. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி சம்பத் அழைத்ததன் பேரில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். வேறு வழக்கு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பன்னீர்செல்வம், சீதாலெட்சுமியின் சொத்தை 40, 45 வருடங்களாக சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். சீதாலெட்சுமி 1991 ல் தாவா சொத்தை பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்ய ஒப்பந்தம் ஏற்படுத்தி சுவாதீனம் ஒப்படைத்தார் என்றால் எனக்கு தெரியாது. சீதாலெட்சுமி பன்னீர்செல்வத்தை எந்த தேதியிலிருந்து மேற்பார்வை பார்க்க சொன்னார் என்று தேதி குறிப்பிட்டுசொல்லவில்லை என்றால் சரிதான். சீதாலெட்சுமி எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. சீதாலெட்சுமிக்கு வாதி சம்பத்தை தவிர மேலும் 4, 5 நபர்கள் வாரிசு உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. வாதியின் தாயார் சீதாலெட்சுமி நான் வைத்துள்ள பூ கடைக்கு வந்து சென்ற நிலையில் எனக்கு பழக்கமாவார். சீதாலெட்சுமி என் கடையில் பூ வாங்குவார் என்றாலும் அவரின் குடும்ப விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். நான் பூ கடை வைத்துள்ளேன் என்ற விவரத்தை முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி 1 ஆம் பிரதிவாதியிடம் எந்த தேதியில் சொத்தை மேற்பார்வை செய்யவேண்டாம் என சொன்னார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு விவரமோ, ஒப்பந்த விவரமோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.